# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் நாள், திங்கள் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

**<u>நிகழ்ச்சி நிரல்</u>**

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அடுக்குமாடி / பன்மாடி குடியிருப்புகளுக்கு குடிநீர் கட்டணம் வசூலிக்க தனிஅலுவலர் அவர்களின் தீர்மானம் எண் .279 நாள்.26.06.2020ம் நாளைய தீர்மானத்தின்படி பன்மாடி / அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும் பொழுது ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனி இனமாக கருதி ஒவ்வொரு குடியிரு ப்புக்கும் தனித்தனியாக வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் வ சூல் செய்யப்பட வேண்டும். ஏற்கனவே வழங்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் ஒவ்வொரு குடியிருப்பிற்கும் மாதாந்திர கட்டணம் வ சூல் செய்யப்பட வேண்டும் என ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந் து, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் எண் .12630/2020/குவ2 நாள்.07.07.2021ல் தெரிவித்துள்ளவாறு , அடுக்கு மாடி/பன்மாடி குடியிருப்புகளுக்கு குடிநீர் கட்டணம் கேட்பு எழுப்புதல் தொடர்பாக தி இந்து மற்றும் தினத்தந்தி நாளிதழ்களில் 02.12.2020 அன்று செய்திதாட்களில் விளம்பரம் செய்யப்பட்டது தொடர்பாக மையஅலுவலகம் மற்றும் நான்கு கோட்ட அலுவலகங்களிலும் பொதுமக்களிடமிருந்து எந்தவித மனுக்களும் மற்றும் ஆட்சபேனைகள் பெறப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதை தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப் படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/5154/2013(மையம்)**

**தீர்மானம் எண்.421 (பொருள்—1): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி **2021—22**ன்கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் **42/2021—22** ன் வாயிலாக 13.07.2021 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.21க்குட்பட்ட வடக்கு பிள்ளையார் கோவில் புதியதாக கழிப்பிடம் கட்டும் பணி (ஆண்கள் 8, பெண்கள் 8) மதிப்பீடு ரூ.24.20 இலட்சம் | 1) திரு. M.சுப்பிரமணியன், 0.05% குறைவு<br>2) திரு.G.வெங்கடேஷ், திருச்சி, 2.50% கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.M.சுப்பிரமணியன், அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.05 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**[இ7/4512/2018(மையம்)**

**தீர்மானம் எண்.422 (பொருள்–2): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , அரியமங்கலம் கோட்ட ம் வார்டு.21க்குட்பட்ட இரட்டை வாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள குறுக்குப் பாலத்தினை (culvert) தெற்குப் பிள்ளையார் கோவில் தெரு , வரகனேரி அக்ரஹாரம் மறறும் நடுத்தெரு பகுதிமக்கள் பயன்படுத்தி வருகின்றனர் . தற்போது குறுக்குப் பாலம் மிகவும் பழுதடைந்தும், மண்தூர்ந்தும், மற்றும் தடுப்புச் சுவர் பழுதடைந்தும் உள்ளது . மழைக்காலங்களில் மழைநீர் சீராக செல்ல வழியில்லாமல் சாலைகளில் தேங்கி நிற்கிறது மற்றும் கழிவு நீர் வீடுகளுக்குள் புகுந்து விடும் அபாயம் உள்ளது . மேலும், திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கு சிறுபாலம் மற்றும் தடுப்புச் சுவர் திரும்ப கட்டும் பணிகளை அவசியம் மேற்கொள்ள வேண்டும் என அறிவுரை வழங்கியுள்ளார்கள் . எனவே, இரட்டை வாய்க்கால் பகுதியில் 2 எண்ணிக்கை குறுக்கு பாலம் மற் றும் தடுப்புச் சுவர் திரும்ப கட்டும் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ .24.00 லட்சத்திற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

1) மதிப்பீட்டுத் தொகை ரூ.24,00,000/-க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை 2021-22ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் **மூலதனநிதி சிறுபாலங்கள் புதிதாக கட்டுதல்/ நடை மேம்பாலம் அமைத்தல் (4103101)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளள நிதி ரூ.50.00 லட்சத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ3/5317/2021(மை)**

**தீர்மானம் எண்.423 (பொருள்–3): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சி பொதுநிதியின் கீழ், கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 09.07.2021 அன்று கோரியதில், (ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 06/2021-22) வரப்பெற்ற கீழ்கண்ட

ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **பொதுநிதி 2020-2021** | | | |
| 1 | வார்டு எண் 7சஞ்சீவி நகர் பிரதான சாலையில் பழுதடைந்த சிறுபாலம் திரும்ப கட்டும் பணி<br><br>மதிப்பீடு ரூ.21.00 லட்சம் | M/s.V.S.& Co, Trichy<br><br>**C. தனபால்**, திருச்சி | 4.95 % குறைவு (பேச்சு வார்த்தைக் குப் பின் மதிப்பீட்டை காட்டிலும் 0.01 சதவீதம் குறைவு)<br><br>5.32% கூடுதல் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **மெசர்ஸ்.V.S.& Co, திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 4.95 சதவீதம் கூடுதலாக கொடுத்திருப் பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரரை, அவர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த சதவீதத்தை குறைத்து தரக் கோரியதில் **மெசர்ஸ்.V.S.& Co, திருச்சி** அவர்கள் தனது 12.07.2021ம் தேதிய கடிதத்தில் மேற்படி பணியினை **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.01 சதவீதம் குறைவான விலை விகிதத்தில்** (4.95 சதவீதம் கூடுதல் விலை விகிதத்திற்கு பதிலாக) செய்து தருவதாக கூறியுள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப் புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.5ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**[இ3/1066/2021]**

**தீர்மானம் எண்.424 (பொருள்–4): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்.5**

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான மருத்துவ காப்பீட்டு திட்டம்-2016 கடந்த ஜூன் மாதம் முடிந்துவிட்டதினை தொடர்ந்து அரசு ஆணை எண் .160 நிதி (ஊதியம்) துறை, நாள்:29.06.2021இல் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினை யுனைடெட் இந்தியா இன்ஸ்ரன்ஸ் நிறுவனம் , சென்னை மூ லமாக அனைத்து அலுவலர் , பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு காப்பீடு திட்டத்தின் கீழ் ரூ.5,00,000/- வரை மருத்துவ செலவீனம் மேற்கொள்ள 01.07.2021 முதல் 30.06.2025 வரை உள்ள காலத்திற்கு அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், பழைய மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் பணியாளர்களிடமிருந்து மாதம் ரூ.150 பிடித்தம் செய்யப்பட்டு வந்தது. தற்போது புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம்-2021இல் மாத சந்தா தொகை ரூ .300/-ஐ (Rs.295/- Subscription for NHIS + Rs.5/- contribution for corpus fund) ஜூலை-2021ஆம் மாதத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்று ஆணையிடப் பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட அரசாணையின்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஜூலை-2021ஆம் மாத ஊதியத்தில் இருந்து மாத சந்தா தொகை ரூ .300/-ஐ பிடித்தம் செய்ய தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.சி7/6744/2021(மையம்).**

**தீர்மானம் எண்.425 (பொருள்—5): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 6**

தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் மாமன்ற தீர்மானம் **எண்.169,** நாள்.**30.04.2020**ன்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்க்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரக்கேடு ஏற்படாத வண்ணம் தினசரி திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள சுயஉதவி குழுக்களின் மூலம் பணிபுரியும் **156** தூய்மை பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்கப்பட்டது. மேலும் தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களிடம் பணிகள் பாதிக்கப்படாத வகையில் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல் **2021** விதிகளுக்குட்பட்டு **01.04.2021** முதல் **30.06.2021** வரை மூன்று மாத காலத்திற்கு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க முன்அனுமதி பெறப்பட்டு உள்ளது. இந்நிலையில் **2021—2022** நிதியாண்டிற்கு கீழ்காணும் சுயஉதவிக்குழுவில் உள்ள **156** தூய்மை பணியாளர்களை **01.04.2021** முதல் **31.03.2022** வரை தொடர்ந்து பணியமர்த்தி கொள்ள அனுமதியும், நாள் ஒன்றுக்கு **ரூ.500/—** வீதம் அதற்காக ஆகும் ஆண்டு ஊதிய செலவினத்திற்கும் **(156×500×365)** = **ரூ.2,84,70,000/—** மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிர்வாக பங்குத்தொகை **13%** சதவீதம் **ரூ.37,01,100/—** ஆக கூடுதல் **ரூ.3,21,71,100/—**ஐ தனிஅலுவலர்(ம)ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | சுயஉதவிக் குழுக்களின் பெயர் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | ஊதியம் வழங்க வேண்டிய காலம் |
|---|---|---|---|
| 1 | அலைகள் | 18 | 01.04.21 – 31.03.2022 |
| 2 | அம்பேத்கர் | 18 | 01.04.21 – 31.03.2022 |
| 3 | சுபாஷ் | 16 | 01.04.21 – 31.03.2022 |
| 4 | தில்லை | 15 | 01.04.21 – 31.03.2022 |
| 5 | வெக்காளி | 18 | 01.04.21 – 31.03.2022 |
| 6 | முத்து | 18 | 01.04.21 – 31.03.2022 |
| 7 | தீபம் | 18 | 01.04.21 – 31.03.2022 |
| 8 | காவேரி | 22 | 01.04.21 – 31.03.2022 |
| 9 | தூய்மை | 13 | 01.04.21 – 31.03.2022 |
| கூடுதல் | | 156 | |

**அலுவலக குறிப்பு :**

சுய உதவி குழுவில் உள்ள தூய்மை பணியாளர்கள் **156** நபர்களை தொடர்ந்து தினக்கூலி அடிப்படையில் பணி அமர்த்தவும், **01.04.2021** முதல் **31.03.2022** வரை அதற்கான ஆண்டு உத்தேச செலவினம் **ரூ.3,21,71,100/—**க்கு அனுமதி வழங்கலாம். **01.04.2021** முதல் **30.06.2021** வரை அனுமதிக்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.சி3/1187/2019(கோ.அபி)**

**தீர்மானம் எண்.426 (பொருள்—6): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**
**பொருள். 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண் .08க்குட்பட்ட ஓயாமாரி மின் மயானம் எதிர்புறம் தேசிய நெடுஞ்சாலை துறையின் மூலம் காவேரி ஆற்று கரையில் தாங்கு சுவர் கட்டும் பணி நடைபெறும் பொழுது காவே ரி ஆற்று கரையில் பொன்மலை திருவெறும்பூர் செல்லும் 600mm AC மெயின் குழாய் உடைப்பினை சரி செய்யும் பணிக்கு ரூ.17.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு , மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி 1994ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் மதிப்பீட்டின் விலையை விட 0.07 சதவீதம் குறைவான விலைவிகிதத்தில் விலைப்புள்ளி கொடுத்துள்ள மெர்சஸ்.A.S.பவர் சொல்யூஷன்ஸ் , திருச்சி அவர்கள் மூல ம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிறக்கம் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ4/4304 /2021(மையம்)**
**தீர்மானம் எண்.427 (பொருள்—7): பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**
**பொருள். 8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் கோட்டம் வார்டு எண் .27ல் உள்ள வாஸ் நகர் செல்லும் சாலையில் புதை வடிகால் இணைப்பு மெயின் குழாய் ஏற்கனவே பதிக்கப்பட்டு உள்ளதால் , மேற்கண்ட சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதாகவும் மற்றும் அச்சாலையை கடக்கும் வாகனங்கள் , மோட்டார் வாகனம் மற்றும் இருசக்கர வாகனங்களில் செல்லும் பொதுமக்களின் வண்டிகளின் டயர்கள் பழுது அடைந்து விடுவதாகவும், மேலும் அச்சாலையை பயன்படுத்த முடியாத அளவிற்கு மேடு , பள்ளங்கள் ஏற்பட்டு இருப்பதாலும் , இச்சாலை சேதமடைந்ததற்கு பாதாள சாக்கடை திட்டத்திற்காக தோண்டப்பட்ட பள்ளங்களுடன் **“D” MART** நிறுவனத்திற்கு வந்து செல்லும் கனரக வாகனங்களும் ஒரு காரணம் என மேற்படி நிறுவனத்தாரரிடம் நேரில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் இச்சாலையை **“D” MART** நிறுவனம் தனது சொந்த செலவில் நீளம் 300 மீட்டர் அகலம் 9 மீட்டருக்கு கான்கிரீட் சாலையை அமைத்துக் கொள்ள அனுமதி கோரி 23.07.2021ல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே மேற்படி சாலையில் மாநகராட்சி விபரக் குறிப்பீட்டின்படி ம திப்பீடு தொகை ரூ **.65,00,000**/-(ரூ.அறுபத்தி ஐந்து இலட்சம் மட்டும் ) இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் சாலைப்பணியினை மேற்கொள்ள வேண்டும் எனவும், எதிர்வரும் காலத்தில் எவ்வித உரிமையும் கோரக்கூடாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு செய்து கொள்ளவும் , இச்சாலையில் மாநகராட்சியால் எதிர்காலப் பணிகள் மேற்கொள்ளும் பொழுது எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் உரிய ஒப்பந்தப் பத்திரம் பெற்று கான்கிரீட் சாலையை **“D” MART** நிறுவனத்தார் அவர்கள் சொந்த செலவில் செய்து கொள்ள தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மேற்கண்ட வாஸ் நகர் பிரதான சாலையை தனியார் அமைத்து தருவதால் மாநகராட்சிக்கு நிதி சேமிப்பு என்பதாலும், இச்சாலையை அமைப்பதாலேயே தனியார் உரிமை கோர இயலாது என்பதாலும் மதிப்பீடு ரூ .65,00,000/க்கு தயாரிக்கப்பட்ட மாநகராட்சி குறியீட்டின்படி உள்ளவாறு “D” MART நிறுவனம் சாலையை தனது சொந்த செலவில் அமைத்துக் கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ1/4263/2021/அரிய**
**தீர்மானம் எண்.428 (பொருள்—8): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 9**

அரசு ஆணை(ப)எண்.189, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.07.06.2013ன் படி ஓய்வூதியதாரர்கள் இறந்தால் ஓய்வூதியதாரரின் மனைவி/கணவன் அல்லது வாரிசுதாரராக நியமிக்கப்பட்டவர்களுக்கு ஓய்வூதிய குடும்ப பாதுகாப்புத் தொகையாக ரூ.50,000/– வழங்கவும் அதற்காக மாதந்தோறும் ஓய்வூதியதாரர்களிடமிருந்து ரூ.80/– பிடித்தம் செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில் அரசாணை எண்.164, நிதி (ஓய்வூதியம்) துறை நாள்.07.07.2021ல் 01.07.2021 முதல் ஓய்வூதிதாரர்களின் பங்களிப்பை ரூ.80/–லிருந்து ரூ.150/– ஆக உயர்த்தி ஆணையிடப் பட்டுள்ளது. அரசாணை பார்வைக்கும் அனுமதிக்கும் தனிஅலுவலர் அவர்களின் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

அரசாணையின்படி குடும்ப பாதுகாப்பு தொகை ரூ.80/–லிருந்து ரூ.150/–ஆக உயர்த்தப்பட்டுள்ளதை 01.07.2001 முதல் ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்யலாம்.

**பி4/6366/2021(மையம்)**

**தீர்மானம் எண்.429 (பொருள்–9): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – ப.மு.நெ. முஜிபுர் ரகுமான்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**